**O.S. No. : 150/2022**

Dated: 03.02.2026

**பி.வா.சா.1: மோகன் குமார்; த.பெ. ராமன்**

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>:**

1. எனக்கும், வாதிக்கும் மற்றும் எனக்கும், 1 ஆம் பிரதிவாதிக்கும் எந்தவிதமான ரத்த பந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தில் எந்தகாலத்திலும் பாகதாரராக (Co-owner) இருந்ததில்லை என்றால் சரிதான். இந்த வழக்கை பொறுத்தவரை நான் ஒரு அதிகாரம் பெற்ற முகவர் மட்டும்தான் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்தில் எனக்கு உரிமை உள்ளது என்பதை காண்பிக்க ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் பொது அதிகாரப்பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். நான் கூறும் மேற்படி பொது அதிகாரப்பத்திரம் 04.01.2013-ற்கு பிறகுதான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

2. 04.01.2013 அன்று 1 ஆம் பிரதிவாதி வாதி பெயருக்கு ஒரு விற்பனை பத்திரம் எழுதிக்கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது, எனக்கு பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்த சொத்தினை பொறுத்து எந்தவிதமான விற்பனை ஆவணமும் எழுதிக்கொடுக்கப்படவில்லை. 1 ஆம் பிரதிவாதி எந்த வருடத்தில் எனக்கு பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் 2022 ஆம் ஆண்டு எழுதிக்கொடுத்தார். 1 ஆம் பிரதிவாதி எனக்கு பொது அதிகாரப்பத்திரம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பு நான் 1 ஆம் பிரதிவாதிக்கு அந்த சொத்தில் உரிமை உள்ளதா என்பதை தெரிந்துகொண்டேனா என்றால் வில்லங்க சான்றிதழ் மூலம் நான் தெரிந்துகொண்டேன். நான் வழக்கு சொத்தினை நேரில் சென்று பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். நான் தற்போது சாட்சியம் அளிக்க வருவதற்கு முன்பு 1 ஆம் பிரதிவாதியிடம் ஆலோசனை செய்துவிட்டு வந்தேனா என்றால் இல்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலம் பத்தி-7-ல் குறிப்பிட்டுள்ள தானப்பத்திரமானது வாதி தாவா சொத்தினை கிரையம் பெறுவதற்கு முன்பு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். நான் 2022 ஆம் ஆண்டு பொது அதிகாரப்பத்திரம் எழுதி பெறும்போது தாவா சொத்தில் வாதி சுவாதீனத்தில் இருந்தார் என்பதை நான் தெரிந்துகொண்டுதான் அதிகாரப்பத்திரம் எழுதிப்பெற்றேன் என்றால் சரியல்ல, அப்போது 1 ஆம் பிரதிவாதிதான் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார். 1 ஆம் பிரதிவாதி எந்த காலத்திலும் 2013 ஆம் ஆண்டு தான் ஒரு கிரையப்பத்திரம் வாதிக்கு எழுதிக்கொடுத்தது குறித்து என்னிடம் கூறவில்லையா என்றால் கூறவில்லை.

4. எனக்கு 2013 ஆம் ஆண்டு 1 ஆம் பிரதிவாதி தாவா சொத்தினை வாதிக்கு விற்பனை செய்த விவரம் தெரிந்தும் தற்போது தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே சொத்து விற்கப்பட்டது தெரிந்தும் நான் அதே சொத்தினை வேறு நபருக்கு விற்பனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை பிரமாண வாக்குமூலத்தில் சர்வே எண்களை மட்டும்தான் ஆட்சேபனை செய்துள்ளேன் என்றும், சொத்தின் எல்லைகளை ஆட்சேபனை செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான். நான் 2013 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கிரையப்பத்திரத்தில் தரப்பினர் இல்லை என்பதால் வாதி என்ன பரிகாரம் கேட்க வேண்டும் என்று கூறுவதற்கு எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல.

5. 1 ஆம் பிரதிவாதி வழக்கு சொத்தில் 43 சென்ட் பூமியை வாதிக்கு விற்பனை செய்தது தெரிந்தும், வழக்கு சொத்தில் பிரச்சனை உள்ளது தெரிந்தும் நான் எனக்கு ஆதாயம் உள்ளது என்பதால்தான் வழக்கு

சொத்தினை 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கு முன்பு 1 ஆம் பிரதிவாதியிடம் ஆலோசனை செய்து வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதி தற்போதும் தாவா சொத்தில் சுவாதீனத்தில் இருந்து விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** : இல்லை

**(3 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் பி.வா.சா.ஆ.1 சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை என்று கூறியதால் குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது).**

L. Prakash

Digitally signed by L. Prakash
Date: 2026.02.03 18:41:52 +0530